# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 11

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

July 2023

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5





**5 ஆகஸ்டு 2022 – 5 ஆகஸ்டு 2023**

**எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டை அனுசரிப்போம்**

**“ஒரு புரட்சியாளனுக்கு புரட்சியைவிட உன்னதமானது எதுவுமில்லை; புரட்சிகர வாழ்க்கையைவிட மதிப்புமிக்கது வேறெதுவுமில்லை; அதனால்தான் புரட்சியின் நலனுக்காக, ஒரு புரட்சியாளனாக வாழ்வதற்காக அவன் எதை இழக்க நேர்ந்தாலும், உயிரையே இழக்க நேர்ந்தாலும், அவன் அதைத் தியாகம் என்று கருதுவதே இல்லை”**

**“மனித மதிப்புகளைப் பெற்றிருந்தால், பட்டினி கிடக்கின்ற ஒரு நாடுகூட அநீதிக்கு எதிராக எழுந்து நிற்க முடியும். ஆனால் மனித மதிப்புகளை இழக்கிறபோது, அந்நாடு அனைத்தையுமே இழந்து விடுகிறது”**

**– சிப்தாஸ் கோஷ்**

# மதவாதப் பிரச்சினையின் ஊற்றுக்கண்

*[பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவரும் இக்காலகட்டத்தின் முன்னணி மார்க்சியத் தலைவர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டு விழா கொண்டாடும் இவ்வாண்டில் வெளிவரும் இதழ்களில் அவரது படைப்புகளிலிருந்து சில கருத்துக்களை வாசகர்களுக்கு வழங்குகிறோம். அவ்வகையில் 1964 ம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற மத நல்லிணக்கத்திற்கான மாநாட்டில் அவர் சமர்ப்பித்த “வகுப்புவாதப் பிரச்சினை குறித்து” கட்டுரையின் சில பகுதிகளை இங்கு வழங்குகின்றோம்.]*

அன்பார்ந்த நண்பர்களே,

வகுப்புவாதம் மற்றும் அதனால் விளையும் கேடுகளை வெறுமனே கண்டிப்பதுடனோ, சமூக அமைதியையும் நல்லிணக்கத்தையும் பாதுகாக்க வெறும் விருப்பங்களைப் பறைசாற்றுவதுடனோ இந்த ஜனநாயக மாநாடு தனது கடமையை முடித்துக் கொள்ளுமானால் அது அறிவித்துள்ள இலக்கை அடைவதில் தோல்வியையே சந்திக்கும். ஏனெனில், வகுப்புவாதத்தைக் கடுமையாகக் கண்டித்தும், பல்வேறு வகுப்பினரிடையே நல்லிணக்கம், நட்புணர்வு மற்றும் அதன் நன்மைகளைப் புகழ்ந்துரைக்கும் மேடைப் பேச்சுக்கள் மூலமும் வகுப்புவாதம் மற்றும் வகுப்புவாத வன்முறைப் பிரச்சினை தீர்க்கப்படமுடியுமெனில் நம்நாட்டில் இது எப்போதோ தீர்க்கப்பட்டிருக்கும். பெரும்பாலான இந்திய மக்களின் கேள்விக்கிடமற்ற நம்பிக்கையைப் பெற்றிருந்த தேசபந்து சித்தரஞ்சன், மகாத்மா காந்தி மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் போன்ற மாபெரும் மனிதர்களெல்லாம் வகுப்புவாதத்தையும் வகுப்புவாத வன்முறையையும் கண்டிக்கவில்லையா? இங்கு வாழும் பல்வேறு வகுப்பினரிடையே, அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தவில்லையா? ஆயினும் இந்த வலுவான அறிவுரைகளின் இறுதி விளைவுதான் என்ன? அவர்கள் காலத்தோடு ஒப்பிட்டால் நமது இலக்கை நோக்கி ஓர் அங்குலம்கூட நாம் முன்னேறவில்லை. வகுப்புவாதம் நம் மக்களை தனது பயங்கரப் பிடிக்குள் வைத்துக்கொண்டு இன்னும் தொடர்கிறது. முன்பு போலவே சிறிது தூண்டப்பட்டாலும், வகுப்புவெறி மற்றும் வகுப்புவாத வன்முறை போன்ற அருவருக்கத்தக்க வடிவங்களில் அது தன்னை வெளிப்படுத்தி வருகிறது.

வகுப்புவாதப் பிரச்சினையை இத்தலைவர்கள் தீர்க்கத் தவறி விட்டனர் என்று கூறுவதால், அவர்கள் இவ்விஷயத்தில் நேர்மையாக ஈடுபடவில்லை என்று அர்த்தமாகாது. மாறாக இத்தலைவர்கள் வகுப்புவாதத்தின் ஊற்றுக்கண்ணை சரியாக அடையாளம் காணத் தவறியதன் விளைவாக, அதனைத் தீர்க்கும் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதுமே தோல்விக்குக் காரணமாகும். இப்படிப்பட்ட சக்திவாய்ந்த தலைவர்கள் வெறுமனே தேசநலன், மதசகிப்புத் தன்மை, மனிதத்துவ மதிப்புகளின் பெயரால் வேண்டுகோள்களை விடுத்து வகுப்புவாதத்தை இம்மியளவும் ஒழிக்க முடியாதபோது, நாமும் நம் நாட்டில் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாத சமூக மற்றும் கலாச்சாரப் புரட்சிகளை நிறைவேற்றும் கடினமான பாதையைத் தவிர்த்து இத்தலைவர்களின் வழியையே

தொடர்ச்சி 5ம் பக்கம்

# தொடர்ந்து நீடித்துவரும் மணிப்பூர் கலவரம்


அற்புதமான இயற்கை அழகு தவழும் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் இன்று திட்டமிட்ட வன்முறையால் ரத்த ஆறு ஓடுகிறது. 14 ஏப்ரல் 1944ல் பிரிட்டிஷ் படையை மணிப்பூர் தலைநகரான இம்பாலுக்கு அருகிலுள்ள மொய்ராங் என்னுமிடத்தில்தான் தோற்கடித்து நேதாஜி இந்திய தேசிய ராணுவத்தின் (ஐஎன்ஏ) கொடியை ஏற்றினார். இதனை ஒரு பெருமையாகக் கருதும் மணிப்பூர் மக்கள் தங்கள் மனதில் நேதாஜிக்கு உயர்ந்த இடத்தை வழங்கியுள்ளனர். ஆனால் அந்த மணிப்பூரில் இன்று மிக மோசமான வன்முறைகள் நடைபெற்று வருகின்றன.

### மணிப்பூர் இந்தியாவில் இணைந்த வரலாற்றுச் சுருக்கம்

20ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்திய சுதந்திரப் போராட்டம் வேகமடைந்தபோது இந்தியாவுடன் மணிப்பூர் சேர்ந்தது. நிலப்பிரபுத்துவ மன்னராட்சிக்கு எதிராக ஜனநாயகத்தை கொண்டுவரவேண்டுமென்று மணிப்பூர் மக்களும் வலியுறுத்தினர். 1930ல் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து பர்மா (தற்போதைய மியான்மர்) பிரிக்கப்பட்டபோது இந்தியாவுடன் இணைந்திருக்க பிரிட்டிஷ் நிர்வாகத்திடம் பிரிட்டிஷ் ராஜ்யம் விருப்பம் தெரிவித்தது. இந்தியா சுதந்திரமடைந்த பிறகு 21 செப்டம்பர் 1949ல் மணிப்பூர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. அக்டோபர் 1949ல் இந்தியாவின் ஒருபகுதியாக மணிப்பூர் ஆனது. முதலில் 1956ல் அது யூனியன் பிரதேசமாக ஆனது, பின்னர் 1972ல் வட இந்திய பகுதிகள் (மறு ஒருங்கிணைப்பு) சட்டம் 1971ன் படி அது ஒரு முழுமையான மாநிலமானது. இந்திய அரசுடன் சேர்ந்தாலும் மணிப்பூரில் ஏற்கனவே இருந்த இனவாத மோதல்கள் தொடர்ந்து நீடித்து வந்தன. காலானியாதிக்கத்தில் இருந்த சூழ்நிலைமைகள் மாறுவதற்கு மாறாக 1950களிலும் 1970களிலும் மோதல்கள் அதிகமாயின. இதனால் மலைவாழ் பழங்குடியினர் எஸ்டி எனவும்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## மணிப்பூர் வன்முறையைக் கண்டித்து ஜூன் 30, அகில இந்திய கண்டன நாள்




**மணிப்பூர் வன்முறையைக் கண்டித்து சென்னையில் நடந்த கண்டனக் கூட்டத்தில் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி உரை**

# பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் 10வது கட்சி மாநாட்டுக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் வாழ்த்துரை

அன்புள்ள தோழரே,

தங்கள் கட்சியின் 10வது மாநாட்டிற்கு (காங்கிரஸ்) எங்கள் பிரதிநிதியை அனுப்ப மிகுந்த விருப்பம் இருந்தபோதிலும், விசா கிடைக்கப் பெறுவது அதற்குத் தடையாகிவிட்டது. இருப்பினும், புரட்சிகர செயல்பாடுகள் இருக்கட்டும், சாதாரண ஜனநாயக செயல் பாடுகளை நடத்துவதே மிகுந்த சிரமமாக இருக்கின்ற, தீவிரமான மக்கள் விரோத ஒடுக்குமுறை சூழலிலும் பாகிஸ்தான் மண்ணில் துணிவுடன் மார்க்சிச லெனினிசப் பதாகையை பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி உயர்த்திப் பிடித்து வருவதைக் காணும்போது நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

அன்புள்ள தோழர்களே, முக்கியத்துவம் வாய்ந்த உங்களது மாநாடு நடக்கும் இச்சமயத்தில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட உலக முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பு ஆழமான பொருளாதார சமூக கலாச்சார நெருக்கடியில் மூழ்கியுள்ளது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் மக்கள் வாழ்க்கையில் இதுவரை கண்டிராத பொருளாதாரச் சுமைகள் அவர்களைக் கடும் அதிருப்திக்கு உள்ளாக்கி வீதிகளில் போராடத் தள்ளுகிறது. அரசாங்கங்களின் காட்டு மிராண்டித்தனமான ஒடுக்குமுறையையும் அவர்கள் எதிர்கொள்கிறார்கள். பல்வேறு தரப்பு உழைக்கும் மக்களின் போராட்ட அலைகள் இன்றைய இயல்பான நடப்பாக ஆகிவிட்டது. உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பி, மக்கள் ஒற்றுமையைக் குலைக்க, அவர்களைச் சகோதரச் சண்டைக்குள் மூழ்கடிக்க, ஆளும் வர்க்கத்தினர் எல்லா நாடுகளிலும் அதிதீவிர தேசியவாதம், இனவாதம், இன, மத, மொழி அடிப்படையில் பிரிவினை, பிராந்தியப் போர் போன்றவற்றை தூண்டுகின்றனர். ஆளும் வர்க்கத்தினரின் இந்த சதித்திட்டங்களையும் மீறி அமெரிக்க ஐக்கிய அரசு, ஐரோப்பா ஆகிய ஏகாதிபத்திய நாடுகளில் மக்கள் போராட்ட அலைகள் தொடர்ந்து வெடித்தெழுகின்றன. ஆனால், இப்போராட்டங்களை வழிநடத்தி அவற்றின் தர்க்கரீதியான முடிவிற்கு இட்டுச் செல்ல சரியான அமைப்புரீதியான கம்யூனிஸ்ட் தலைமை இல்லாததால் போராட்டங்கள் நீர்த்துப் போகின்றன.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மாபெரும் தலைவர் ஸ்டாலினின் தலைமையில் சோவியத் யூனியனின் வெற்றிக்குப் பிறகு, ஆசிய ஆஃப்பிரிக்க தென்னமெரிக்க காலனி மற்றும் அரை காலனி நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலை இயக்கங்களும் நகர்மய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கங்களும் மிகப் பெரிய அளவில் வளர்ந்தன. சீனாவில் மாபெரும் தலைவர் மாவோவின் தலைமையில் நடந்த புரட்சிக்குப் பின் உலக கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் சக்திகளுக்கும் மிகப் பெரிய ஊக்கம் பிறந்தது. இச்சூழ்நிலையில் 1953ல் ஸ்டாலின் மறைந்தார். 1956ல் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் சோவியத் யூனியன் சிபிஎஸ்யுவின் 20வது காங்கிரசின்போது துரோகி குருச்சேவ், ஸ்டாலின் மீதான தனிநபர் துதியை எதிர்த்துப் போராடுவதாகச் சொல்லி தலைவர் ஸ்டாலின்மீதே தாக்குதல் தொடுத்தார். அப்பொழுதே எங்கள் கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் இக்காலகட்டத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட் தலைவர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் எச்சரிக்கை செய்தார். ஸ்டாலின் மீதான குருச்சேவின் தாக்குதல், ஸ்டாலின் அத்தாரிடியை மதிப்பிழக்கச் செய்து இறுதியில் லெனினின் மகுடத்தையும் கீழிறக்கி, லெனினிசத்திலிருந்து புரட்சிகர பாடங்களை அகற்றி சித்தாந்தரீதியில் திருத்தல்வாதம் பெருக வழிவகுத்துவிடும் என அவர் எச்சரித்தார். சோவியத் யூனியனிலும் பின்னாளில் சீனாவிலும் திருத்தல்வாதம் எதிர்ப்புரட்சிக்கு இட்டுச் சென்றுவிட்டது. ஆனால் எங்கள் கட்சிக்கு அன்று போதிய வலிமை இல்லாததால் உலக கம்யூனிஸ்டுகளுக்கு உரக்கச் சொல்ல இயலவில்லை.

விளைவாக, இன்று உலக கம்யூனிஸ்ட் இயக்கம் முற்றிலும் சிதைந்து கிடப்பதை நாம் நோக்குகின்றோம். ஆனால், பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளும் குழுக்களும் மீண்டும் வளர்வதைப் பார்க்கும் போது ஆறுதல் தருகின்றது. இவர்கள் சரியான மார்க்சிய லெனினிய புரிதலுடனும் இன்றைய சூழலுக்கு அதனை சரியாகப் பிரயோகிப்பதன் மூலமும் உழைக்கும் மக்களுக்கு சரியான வழியைக் காட்டி வெல்லற்கரிய சக்தியாக மீண்டும் உருவாக முடியும்.

இந்த இலக்கை நோக்கி கூடிப் பணியாற்ற நாங்கள் விரும்புகின்றோம். கருத்துப் பரிமாற்றங்களை தொடருவோம். தங்கள் அறிக்கைகளை, வெளியீடுகளை, மாநாட்டின் ஆவணங்களை அனுப்புங்கள். நாங்களும் அதைச் செய்கின்றோம் ■

புரட்சிகர வாழ்த்துக்களுடன்,

**பிரவாஸ் கோஷ்**

பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

**புரட்சி நீடூழி வாழ்க!**

**மார்க்சிசம் லெனினிசம் நீடூழி வாழ்க!**

**பாட்டாளிவர்க்க சர்வதேசியம் நீடூழி வாழ்க!**

# ஜெனிவா பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் மாநாட்டில் ஏஐயுடியுசி பங்கேற்பு

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO-International Labour Organisation) ஜெனிவாவில் ஜூன் 5இல் நடத்திய மாநாட்டில் ஏஐயுடியுசியின் அகில இந்திய செயற்குழு உறுப்பினர் தோழர் சமர்சின்ஹா கலந்து கொண்டார். அதில் ‘அப்ரெண்டிஷிப்’ மற்றும் ‘உழைப்புபாதுகாப்பு’ ஆகிய இரு அமர்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஓராண்டு அல்லது குறிப்பிட்டகால அப்ரெண்டிஷிப் (தொழிற்பயிற்சி) முடித்தபின், வேலைக்கு அமர்த்தும் நிறுவனமே அவருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என இந்தியா மற்றும் பிற நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் பிரதான கோரிக்கைகளில் இந்த ஒன்றை தோழர் சமர்சின்ஹா வலியுறுத்தினார். அதேபோல, அவர்களுக்கு வழங்கப்படும் சன்மானம் நிறுவனத்தின் விருப்பப்படி இருக்கக்கூடாது, மாறாக அதே பணி செய்யும் ஊழியரின் குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்றார். இந்தியா உட்பட உலகெங்கிலும் தொழிலாளர் சட்டங்களை மீறுவது அன்றாட நடவடிக்கையாக வேலைக்கு அமர்த்துவோர் செய்து வருகின்றனர். போராடிப்பெற்ற உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறிக்கின்றனர். 8 மணிநேர வேலை ஒரு கனவாகி விட்டது. நிரந்தர வேலை பிக்சட் டெர்ம் (நிர்ணயித்தகால) வேலையாக மாற்றப்படுகின்றது. சம வேலைக்கு சம ஊதியம் என்பதை ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மறுக்கின்றனர். பென்ஷன் போன்ற சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் பறிக்கப்படுகின்றன. தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச கூலியை இந்தியா உட்பட ஐஎல்ஓ உறுப்பு நாடுகளே வழங்குவதில்லை. அமைப்புசாரா தொழில் பிரிவுகளில் பணிபுரிபவர்கள்தான் கடுமையான சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். தொழிலாளர் உரிமைகளைப் பறித்து தான்விரும்பியதைச் செய்யும் உரிமத்தை முதலாளிகளுக்கு கொடுக்கும் வகையில் புதிய மிக மோசமான ‘லேபர்சட்டம்’ கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் பின்தங்கிய பலநாடுகளில் தொழிலாளர் சட்டங்கள் சர்வசாதாரணமாக மீறப்படுவதை தடுத்து அந்தந்த அரசாங்கங்கள் மீது அழுத்தத்தைக் கொடுக்குமாறு ILO விற்கு அவர் கோரிக்கை விடுத்தார் ■

# தனியார் பேருந்துகள் மோதிய கோர விபத்து குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி **20.06.2023** அன்று வெளியிட்டுள்ள அறிக்கை:*

**19.06.2023** அன்று காலை கடலூர் மாவட்டம் மேல்பட்டம்பாக்கம் அருகே இரு தனியார் பேருந்துகள் மோதிக்கொண்ட விபத்தில் இதுவரை ஐந்து உயிரிழப்புகளும் எழுபதுக்கும் மேற்பட்டோருக்கு படுகாயமும் ஏற்பட்டுள்ளதைக் கண்டு ஆழ்ந்த வருத்தத்தை சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக் கமிட்டி தெரிவித்துக்கொள்கிறது. மதிப்புமிக்க மனித உயிரிழப்பை ஈடு செய்ய எதுவும் இல்லை. அவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறும் அதே வேளையில் அரசாங்கம் உயிரிழந்தோரின் குடும்பங்களின் மறுவாழ்விற்கு உரிய இழப்பீடும் அனைத்துவகை உதவிகளையும் வழங்க வேண்டும். காயமடைந்தோருக்கு உயர்தர சிகிச்சையையும் இழப்பீட்டையும் அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் மாநிலக் கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

போக்குவரத்து தனியார்மயமும், உச்சபட்ச இலாபத்திற்காக பராமரிப்புச் செலவுகளைக் குறைத்து அதி வேகமாகத் தனியார் பேருந்துகளை இயக்குவதும் வாகன விதிகளுக்கு உட்பட்டு அவை இயங்குவதை உறுதி செய்யாத, ஊழல் மலிந்த சாலை போக்குவரத்து அலுவலகங்களும் இத்தகைய உயிரிழப்பிற்கு அடிப்படைக் காரணங்களாகும். இந்த விபத்தும் டயர் வெடித்ததால் ஏற்பட்டிருக்கக் கூடும் என கூறப்படுகிறது. எனவே, மக்கள் பயணிக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும், பாதுகாப்பு விதிகளை உறுதிசெய்து தரம்வாய்ந்த பேருந்துகளை இயக்க வேண்டும் என மாநிலக் கமிட்டி வலியுறுத்துகிறது ■

## மணிப்பூர் கலவரம் . . .

# கலவரத்தை அடக்கத் தவறிய ஆட்சியாளர்கள்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

மற்றவர்கள் ஓபிசி, பொதுப் பிரிவினர் எனவும் பிரிக்கப்பட்டனர். அதில் ஒரு சிறு பிரிவினர் எஸ்சி ஆகவும் வகைப்படுத்தப் பட்டனர். ஆயுதமேந்திய நாகாக்களுக்கும் மெய்த்திக்களுக்கு மிடையேயும், நாகாக்களுக்கும் குக்கீகளுக்கு மிடையேயும் அவ்வப்போது மோதல்கள் நடைபெற்றன. மணிப்பூர் நில வருவாய் மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1960 மற்றும் ராணுவச் ஷரத்து 371 சி டி போன்றவை பிளவையும் மோதல்களையும் மேலும் அதிகப்படுத்திவிட்டன.

நமது நாட்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்டம் அரைகுறையாக முடிந்துவிட்டது. நாட்டிலுள்ள அனைத்து தேசிய இனங்களையும் சாதி, இனம், மொழி, பிராந்திய பாகுபாடின்றி ஒன்றுபடுத்துவதற்கு சமரசவாத தலைமையால் முடியவில்லை. மாறாக தொடர்ந்து சாதிய, மதவாத, இனவாதப் பகை, மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவருமான சிப்தாஸ் கோஷ் கூறுகிறார்: "ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அரசியல் போராட்டத்தின் போக்கில் பல்வேறு மொழிகளைப் பேசும், பல மதங்களைப் பின்பற்றும் இந்திய மக்கள் அரசியல் ரீதியாக ஒரு தேசமாக உருவாயினர், ஆனால் நிலப்பிரபுத்துவம், நிலப்பிரபுத்துவ ஒற்றுமை யின்மை, மத அடிமைத்தனம் போன்றவற்றிற்கு எதிராக சமுதாயத்தை ஜனநாயகப் படுத்துவதற்கான சமூக மற்றும் கலாச்சாரப் புரட்சிகளை நடத்துவதற்கு நமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமை யிலிருந்தவர்களின் தோல்வியால் இந்திய மக்கள் தொடர்ந்து மதம், சாதி, மொழி, இனம் போன்றவற்றால் பல்வேறு சமூகங்களாக சமூக ரீதியாகவும் கலாச்சாரரீதியாகவும் பிளவுபட்டு கிடக்கின்றனர்". (வகுப்புவாதப் பிரச்சினைகள் குறித்து, சிப்தாஸ் கோஷ்) சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் இந்திய அடையாளத்துடன் மக்களை ஒருங்கிணைப்பதற்கான வாய்ப்பு காங்கிரஸ் தலைமைக்கு இருந்தது. ஆனால் அதன் எஜமானர்களான ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்காக காங்கிரஸ் அவ்வாறு செய்யவில்லை.

### தற்போதைய கலவரத்தின் பின்னணி

மணிப்பூரில் 60 எம்எல்ஏக்கள் உள்ளனர். அதில் 40 பேர் மெய்த்தி வகுப்பினர். 2022 தேர்தலின் போது பாஜக ஆட்சி அமைந்தால் குக்கி இனத்தவரின் பிரச்சினைகளை தீர்ப்போம் என்று உறுதியளித்ததால் பாஜகவுக்கு குக்கி சமூகத்தினர் ஆதரவளித்தனர். அதனால் குக்கி மற்றும் பிற இனத்தவரின் எம்எல்ஏக்கள் அதிகரித்து குக்கி, சோமி இனத்தோர் மட்டுமே 10 எம்எல்ஏக்களைக் கொண்டுள்ளனர். இதன் மூலம் பாஜகவும் ஆட்சியைத் தக்க வைத்தது. ஆனால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று வதற்குப் பதிலாக குக்கி சமூக போராளிகளுடன் 2008–ல் அரசாங்கம் பரஸ்பரம் செய்து கொண்ட "தாக்குதல் நிறுத்த ஒப்பந்த"த்தை (Suspension of Operation agreement) மார்ச் 10, 2023 அன்று இடைக்கால நிறுத்திவைப்பு செய்தது. அதாவது போராளிகளும் தாக்குதலை நிறுத்த வேண்டும், ராணுவமும் தாக்குதலை நிறுத்திக் கொள்ளும் என்பதே அந்த ஒப்பந்தம். 2022 தேர்தலுக்குப்பின் இந்த ஒப்பந்தத்தை தற்போது நிறுத்தி வைப்பதன் மூலம் மீண்டும் ராணுவத் தாக்குதலை பாஜக அரசாங்கம் குக்கி மற்றும் மலைவாழ் மக்கள் மீது தொடுக்கத் துவங்கிவிட்டது. இது நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. 'அரசியலமைப்புச் சட்டத்தின் படி தனி நிர்வாகம்' வேண்டுமென்று குக்கி – சோமி பழங்குடியினரைச் சேர்ந்த 10 எம்எல்ஏக்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால் முதலமைச்சர் என் பிரேன் சிங் "மணிப்பூரின் பிராந்திய இறையாண்மை பாதுகாக்கப்படும்" என்று அறிவித்தார். அதே சமயம் மெய்த்தி இன மக்களை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்ப்பதை ஒரு மாதத்திற்குள் பரிசீலிக்க வேண்டுமென மார்ச் 27, 2023 அன்று மணிப்பூர் உச்சநீதி மன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஏற்கெனவே குக்கி சோமிசின் ஹமொர்மிசோ இன மக்கள் பட்டியலினத்தவர்களாக இருக்கின்றனர். தற்போது, மெய்த்தி இனத்தை சேர்ப்பதன் மூலம், தங்களுக்கு இருக்கும் சிறிதளவு சலுகையும் நீர்த்துப்போய்விடும் என இவர்கள் கருதினர். இதனை எதிர்த்து அவர்கள் மே 3, 2023 அன்று அமைதி ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலத்தின்மீது சில மெய்த்தி இன குண்டர்களை வைத்துக் கொண்டு அரசாங்கம் மறைமுகமாக வன்முறைத் தாக்குதலைத் தொடுத்ததாக செய்திகள் வருகின்றன. எதிர்ப்பார்த்ததுபோல் இரு இன மக்களிடையே மிகப்பெரிய கலவரம் தொடர்ந்து வெடித்தது. இதனால் பாஜக அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டோம், தற்போதைய வன்முறைக்குப் பிறகு மீண்டும் பள்ளத்தாக்கில் குடியேறுவதைப் பற்றி சிந்தித்துக்கூடப் பார்க்கமுடியவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வுக்கு இந்த 10 எம்எல்ஏக்கள் கடிதம் எழுதியதாக தகவல்கள் வெளியானது.

மணிப்பூர் மக்கள் தொகையில் மெய்த்தி சமூகத்தினர் 53% இவர்கள் பெரும்பாலும் தலைநகர் இம்பால் பள்ளத்தாக்குகளில் வாழ்கின்றனர். வளமான பள்ளத்தாக்குப் பகுதியில் 90% பரப்பளவை இவர்கள்தான் சொந்தமாக்கிக் கொண்டுள்ளனர். மணிப்பூர் மக்கள் தொகையில் நாகா மற்றும் குக்கி பழங்குடியினர் 40% பேர் உள்ளனர். இவர்கள் மலை மாவட்டங்களில் வசிக்கின்றனர். மெய்த்திக்கள் விவசாயிகளாக உள்ளனர். இவர்கள் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருபவர்கள் என்று கூறப்படுகிறது. குக்கிகள் 18 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அவர்களுக்கு சுமை தூக்கவும், சிப்பாய்களாகவும் பணி செய்வதற்காக அழைத்து வரப்பட்டவர்கள். பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்ட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மெய்த்திக்களுக்கும் குக்கிஸ் களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தினர். இந்திய சுதந்திரமடைந்த பிறகும் நிலைமை மாறவில்லை. தற்போது பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு நிலைமை மேலும் மோசமாகிவிட்டது.

மெய்த்திக்களில் பெரும்பான்மையானோர் இந்துக்களாகவும், குக்கிகள் கிறிஸ்துவர்களாகவும் உள்ளனர். இதனைப் பயன்படுத்தி வடகிழக்கு மாநிலங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர பாஜக தனது வழக்கமான மதவாத வெறுப்பு பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டது. எனவே கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை தூண்டிவிட்டனர்.

### மலைவாழ் மக்களுக்கு எதிரான, திருத்தப்பட்ட வனப்பாதுகாப்புச் சட்டமும் பிரச்சினைக்கு காரணமாகும்

சூழ்நிலை மேலும் அபாயகரமான நிலையை எட்டுவதற்கு இன்னும் பல காரணங்கள் உள்ளன. அண்டை நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அங்குள்ள 38 மலைவாழ் கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 1000 பேருக்கு குறையாமல் வசிப்பதாகவும், இவர்களெல்லாம் 50 முதல் 60 ஆண்டுகளாக அங்கேயே குடியிருப்பதாகவும் குக்கிகள் கூறுகின்றனர். அதாவது இவர்களை மணிப்பூர் மாநிலத்தின் குடிமக்களாக பூர்வ குடிமக்கள் கருதுகின்றனர். ஆனால் சட்டவிரோதமாக குடி யேறியவர்கள், இவர்களை வெளியேற்றுவோம் என்று ஆளும் பாஜக அரசாங்கம் பிப்ரவரி 2023ல் அறிவித்தது. அப்போதிலிருந்தே பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது. பாஜகவின் அறிவிப்பிற்கு ஆளும் பாஜகவில் உள்ள பழங்குடியின எம்எல்ஏக்களே எதிர்ப்பு தெரிவித்ததோடு முடிவை கைவிடுமாறு மாநில தலைமையைக் கேட்டுக்கொண்டனர். அங்கு குடியிருப்பவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்காமலேயே வாழ்வாதாரத்திற்கு அந்த மலைப்பகுதிகளை மட்டுமே நம்பியிருந்த அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளைத் தொடங்கினர். பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்ற சட்டத்தின் பெயரில் பழங்குடியினரின் நிலங்களை அபகரிப்பதை எதிர்த்து இவ்வருடம் மார்ச் மாதம் கங்போக்பி பகுதியில் குக்கி மக்கள் நடத்திய பேரணியில் போலீஸ் தாக்கியதால் 5 பேர் காயமடைந்தனர். இந்த வன்முறைக்கு குக்கி தேசிய ராணுவமும் சோமி புரட்சிகர ராணுவமும்தான் காரணம் என்று குற்றம்சாட்டிய அரசாங்கம் இந்த இரு ஆயுதம்தாங்கிய அரசியல் குழுக்களுடன் போட்டிருந்த, நாம் முன்பே குறிப்பிட்ட, "தாக்குதல் நிறுத்த" ஒப்பந்தத்தை திரும்பப்பெற்றது.

வனத்தை ஆக்கிரமித்துள்ளவர்களை இவர்கள்தான் தூண்டி விடுகின்றனர், பழங்குடி யினரிடம் உள்ள நிலங்களை கைப்பற்றியே தீருவோம் என்று அரசாங்கம் கூறியது. ஏகபோகங்களிடம் இந்த நிலங்களை ஒப்படைப்பதற்காகவே இப்படி பிரச்சினையை அரசாங்கம் செய்கிறது. இதனால் குக்கிகள் கடும் கோபமடைந்தனர். நிலங்களைப் பறிப்பதோடு தங்களை அழிப்பதற்காகவே சதி நடக்கிறது என்று பழங்குடி குக்கிகள் ஆத்திரமடைந்தனர். எனவே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மணிப்பூர் மலைவாழ் பகுதியில் குக்கிகளுக்கான தனி நிர்வாகம் வேண்டும் என்று வலியுறுத்தினர். ஏனெனில் மணிப்பூரின் அரசியல், பொருளாதார அதிகாரம் மெய்த்திக்களின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அரசாங்கம் அவர்களுக்கே ஆதரவாக உள்ளது என்று கருதுகின்றனர். ஆனால் சாமானிய குக்கி மக்கள் மணிப்பூரிலிருந்து வெளியேறும் தனி நிர்வாக கோரிக்கையை ஏற்கவில்லை. ஆனால் முதலாளித்துவ ஊடகங்கள் பொய்யான செய்தியை வெளியிட்டனர். தங்கள் அடையாளத்தை காக்க தனி நிர்வாகம் வேண்டுமென்று குக்கிகள் கூறினர்.

இதனிடையே மெய்த்தி சமூகத்தை சேர்ந்த பாஜக முதலமைச்சர் ஒட்டுமொத்த குக்கி மக்களும் சட்டவிரோத கசகசா போதைப்பயிர் உற்பத்தியிலும் போதைப்பொருள் சாகுபடியிலும் வர்த்தகத்திலும் ஈடுபடுவதுபோன்ற ஒரு அறிக்கையை வெளியிட்டார். ஆனால் அதிகார வர்க்கத்தின் துணையின்றி இத்தகைய போதைப் பொருள் வியாபாரம் எப்படி நடைபெற முடியும்? போதை பொருள் கடத்தல் மாஃபியாக்கள் மீது நடவடிக்கை என்ற பெயரில் ஏற்கெனவே கடந்த ஆட்சியில் 14,315 ஏக்கர் பரப்புள்ள கசகசா விளைநிலங்களை குக்கி பழங்குடியினரிடமிருந்து பாஜக பறித்தது.

மலைப்பகுதிகளில் மக்களின் வாழ்க்கை மிகவும் துயரமிக்கதாக உள்ளது. அங்கே அடிப்படை வசதிகளே இல்லை. ஒரு ஆம்புலன்ஸ் வருவதற்கு கூட போதிய அடிப்படை வசதிகள் இல்லை. போதிய மருத்துவ வசதிகளுமில்லை. அத்துடன் கடுமையான குடிநீர் பஞ்சம். அன்றாட நீர் தேவைக்காக அங்கே பல கிலோமீட்டர் தூரம் மக்கள் நடந்து செல்கின்றனர். ஆனால் குக்கி மக்களின் இந்த துயரநிலைகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அவர்கள் கசகசா உற்பத்தியிலும் போதைப்பொருள் கடத்தலிலும் ஈடுபடுவதாக பாஜக குற்றம் சாட்டுகிறது. மற்றொருபுறம் சட்டவிரோதமாக குக்கிகள் குடியேறுவதாகக் கூறி, இப்படியே நடந்தால் மெய்த்திக்களைவிட குக்கிகள் அதிகமாகிவிடுவர் என்று மெய்த்திக்களிலுள்ள பிற்போக்குவாதிகள் பரப்பத் தொடங்கினர். இது இருதரப்பினரிடையே பகை உணர்வை வளர்த்துவந்தது.

இதனிடையே, முன்பு குறிப்பிட்டபடி மார்ச் 27 அன்று மெய்த்தி சமூகத்தை பழங்குடியினராக 4 வாரங்களுக்குள் அங்கீகரித்து மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரைக்குமாறு மாநில

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மணிப்பூர் கலவரம் . . .

# அடிப்படைப் பிரச்சினைகளுக்கான அனைத்துப்பிரிவு மக்களின் ஒன்றுபட்ட போராட்டமே ஒரே தீர்வு

*3ம் பக்கத் தொடர்ச்சி*

அரசாங்கத்திற்கு மணிப்பூர் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. மணிப்பூரில் பழங்குடியினர் பகுதிகளில் பழங்குடியினர் மட்டுமே நிலங்களை வாங்க முடியும், பழங்குடியினரல்லாதோர் வாங்க முடியாது. பழங்குடியினருக்கு அரசியலமைப்புச் சட்டம் இந்த பாதுகாப்பை வழங்கியுள்ளது. ஆனால் மெய்த்திக்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்து கொடுத்தால் அவர்களும் வனப்பகுதிகளில் நிலங்களை வாங்க முடியும். இது குக்கிகளுக்கு பாதகமாகிவிடும். இவையேல்லாமே எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றிவிட்டன.

மணிப்பூர் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக அனைத்து மணிப்பூர் பழங்குடியின மாணவர் சங்கம் மே 3 அன்று நடத்திய அமைதி ஊர்வலத்தில் அரசு ஆதரவுடன் மெய்த்தி குண்டர்கள் தாக்கியதில் வன்முறை வெடித்தது. அதனால் சுராச்சந்தன்பூர் மாவட்டத்தில் உள்ள டோர்பங்கில் உள்ள மெய்த்திக்களின் வீடுகள் கொள்ளுத்தப்பட்டன. இதனால் அங்கிருந்து 4000 பேர் வெளியேற நேர்ந்தது. குக்கி குழுவினர் மெய்த்தி கிராமங்களைத் தாக்கத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து இம்பாலில் உள்ள குக்கிகளின் பகுதிகளைக் குறிவைத்து மெய்த்திக்கள் தாக்கத் தொடங்கினர். இது படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் பரவியது. மாநில அரசு நிர்வாகத்தின் ஆதரவுடன் மெய்த்தி சமூகத்திலுள்ள பிற்போக்குவாத குழுவினர் குக்கிகளை அந்நியர்கள் என்றும் அவர்களை வெளியேற்ற வேண்டுமென்றும் தொடர்ந்து பரப்பத் தொடங்கினர். இதனால் மெய்த்தி சமூகத்துடன் சேர்ந்து வாழ்வது சாத்தியமில்லை என்று கருதி தங்களுக்கு தனி நிர்வாகம் வேண்டுமென்று குக்கிகள் மீண்டும் அழுத்தம் கொடுக்கின்றனர்.

உள்துறை அமைச்சர் அமித்ஷா சென்று பேச்சுவார்த்தை நடத்தியும் கலவரம் குறையவில்லை. மாநில அரசாங்கத்தின் தவறை சுட்டிக்காட்டுவதற்கு பதிலாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே இதற்கு காரணம் என்று அவர் பழிபோடுகிறார்.

நாட்டின் பிரதமர் எங்கெங்கோ சென்று விழாக்களில் கலந்துகொள்கிறார். ஆனால் ஒரு மாநிலத்தில் இத்தனை நாள் கலவரம் நடக்கிறது. மக்கள் அகதிகளாக நிற்கின்றனர். வன்முறையை நிறுத்துவதற்கு ஒரு வேண்டுகோள்கூட விடுக்கவில்லை.

இவ்வளவு நாட்கள் தொடர்ந்து கலவரம் நடப்பதற்கு ஆயுதங்கள் எப்படி கிடைத்தன? துப்பாக்கிச் சூடுகளும் நடப்பதாக தகவல்கள் வருகின்றன. ஒவ்வொரு சமூகத்திலும் ஆயுதம் தாங்கிய குழுக்கள் இருப்பதால் மோதல் மேலும் வலுக்கிறது. அனைத்து கட்சிகளிலும் இந்த குழுக்களுக்குத் தொடர்பு இருக்கிறது. மணிப்பூர் கலவரம் ஆரம்பித்த உடனேயே 1000க்கும் மேற்பட்ட ஆயுதங்கள், 10,000 தோட்டாக்கள் இம்பாலில் உள்ள மணிப்பூர் காவல் பயிற்சி கல்லூரி, இரண்டு காவல் நிலையங்கள், ஐஆர்பி பட்டாளியன் கேம்ப் ஆகிய இடங்களிலிருந்து மெய்த்தி சமூகத்தின் ஆயுத குழுக்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கலவரத்தை நீடித்து வைத்திருப்பதற்காக இந்த ஆயுதங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

மெய்த்திக்களை இந்துக்கள் என்று பாஜக முன்னிறுத்துகிறது. மலைவாழ் மக்களை கிருஸ்துவர்கள் இஸ்லாமியர்கள் என்று அடையாளப்படுத்துகிறது. இவ்வாறு மொழிவாரியாக, மதரீதியாக, பிராந்திய ரீதியாக, சாதிரீதியாக மக்களைப் பிரிக்கும் வேலையை ஆளும் முதலாளித்துவ வர்க்கம் தொடர்ந்து செய்து வருகிறது. ஒருதரப்பு மக்களை மற்றொரு தரப்பு மக்களுடன் மோதவிடுகின்றது. அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாறாக பிரச்சினைகளை ஆளும் வர்க்கமும் அவர்களது அடிவருடி அரசாங்கங்களும் தூண்டி வருகின்றன.

அசாமில் முன்பு இது போன்ற கலவரங்கள் நடைபெற்றன. அங்கே பெங்காலி எதிர்ப்பு, சிறுபான்மையினர் எதிர்ப்பு உணர்ச்சிகளை ஆட்சியாளர்கள் தூண்டிவிட்டனர். தற்போது வடகிழக்கு மாநிலங்களிலும் இதேபோன்ற மோதல்களை ஆளும் முதலாளித்துவ ஆட்சியாளர்களும் அதன் அடிவருடி கட்சிகளும் தூண்டிவிடுகின்றனர். இந்த மோதல்களால் ஏராள மான சாமானிய மக்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வாழ்வாதரங்களை இழந் துள்ளனர். வீடுகளையும் இதர சொத்துக்களையும் இழந்துள்ளனர். இந்த இழப்புகளையெல்லாம் மீட்டெடுப்பது அவர்களுக்கு மிகவும் சிரமமானதாகும். ஏற்கெனவே மணிப்பூரில் 36% மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளனர். ஒருசில பேர்தான் ஏதோ ஒரு வேலையில் உள்ளனர். அதிலும் பெரும்பாலும் தனியார், சொந்த வேலைகளே. உரிய மருத்துவ வசதியோ குடிநீர் வசதியோ இல்லை. வேலை வாய்ப்புகளும் இல்லை. இந்திய சுதந்திரம் பெற்ற பிறகு அனைவருக்கும் கல்வி, வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் போதிய வேலை வாய்ப்போ கல்வி நிறுவனங்களோ இல்லாத நிலையில் ஆழ்ந்த விவாதங்கள் மற்றும் வலியுறுத்தல்களுக்குப் பிறகு எஸ்சி, எஸ்டி என்ற சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க சட்டத்தில் இடம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் பல போராட்டங்களுக்குப் பிறகு பிற்படுத்தப்பட்ட பிரிவுகளும் உருவாக்கப்பட்டு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. ஆனால் முதலாளித்துவத்திற்கு உள்ளேயே இருக்கும் நெருக்காடியால் தங்குதடையற்ற தொழில் வளர்ச்சி இல்லாததால் இடஒதுக்கீடு முழு பலனைத் தரவில்லை. அனைவருக்கும் கல்வி வேலை வாய்ப்பு என்பது இன்னும் எட்டாக்கனியாகவே உள்ளது. இந்த இட ஒதுக்கீடுகளை எல்லாம் எதிர்த்தவர்கள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டுக்கு 8 லட்சத்திற்கு குறைவாக சம்பாதிக்கும் உயர்ஜாதி “ஏழைகளுக்கும்” 10% இடஒதுக்கீட்டை கொண்டுவந்தனர். இந்த நிலையில், இல்லாத வேலைக்கு இடஒதுக்கீடு என்ற பெயரில் மோத விடும் போக்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்து செய்து வருகின்றனர். ஒருவருக்கு இடம் கிடைக்காததற்கு மற்றவரே காரணம் என்ற பகை உணர்ச்சியைத் தூண்டுகின்றனர். அந்த மக்களை வாக்கு வங்கியாகவும் மாற்ற முயற்சிக்கின்றனர். தமிழ்நாட்டில்கூட வாக்கு வங்கி அரசியலுக்காக மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் உள் ஒதுக்கீடு வழங்கினர். அது மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரிடையே பிளவை ஏற்படுத்தி ஒரு வகையான பகை உணர்ச்சியை ஒவ்வொரு முறையும் ஏற்படுத்தியுள்ளதை நினைவுகூர வேண்டும்.

### ஒடுக்கப்படும் மக்களின் இரு தரப்பினரும் ஒற்றுமை காக்க முயற்சிப்பது நம்பிக்கை தருகிறது

இவ்வளவு மோதல்கள் நடைபெற்றாலும் மணிப்பூரில் நம்பிக்கை தரும் செய்திகளும் வருகின்றன. குக்கிகளின் பகுதிக்குள் சில மெய்த்திக்கள் சிக்கிக்கொண்டனர். அவர்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்த குக்கிகளின் ஆயுதக்குழு முயன்றபோது அங்கிருந்த சாமானிய குக்கிகள் மனித சங்கிலியாக நின்று மெய்த்திக்கள் மீது தாக்குதல் நடத்தவிடாமல் தடுத்துள்ளனர். அதேபோல மணிப்பூர் பல்கலைக்கழகத்தில் குக்கி மாணவியரை குறிவைத்து மெய்த்தி வெறியாளர்கள் தாக்க முயன்ற போது அங்கிருந்த மெய்த்தி மாணவர்கள் ஒன்றுகூடி தடுத்து நிறுத்தினர். சமீபத்தில் தீவிரவாதிகளிடமிருந்து காஷ்மீர் பண்டிட்டுகளை அங்கிருந்த முஸ்லீம்கள் காப்பாற்றினர். இதுபோன்ற சம்பவங்கள் சாமானியர்கள் வன்முறையில் ஈடுபடவில்லை, அவர்கள் ஒன்றுபட்டு இருக்கவே விரும்புகின்றனர் என்பதையே காட்டுகிறது. இதுபோன்ற வகுப்புவாத மோதல்களால் பொதுமக்களுக்கு சாமானியர்களுக்கு எந்த நன்மையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் இழந்ததே அதிகம். மக்களைத் தூண்டிவிடும் ஆளும் வர்க்கம்தான் அதிக லாபமடைகின்றது. இந்த உண்மையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பெருகிவரும் விலைவாசி உயர்வு, வேலையின்மை, கல்வி மறுப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைத்துத் தரப்பு மக்களும் ஒன்றுபட்டு போராடுவது ஒன்றுதான் வழியாகும். அதற்கு அனைத்துத் தரப்பு சாமானிய மக்களின் ஒற்றுமையை கண்ணின் கருமணி போல் பேணிக்காக்க வேண்டும். இந்த மோதல்களைத் தூண்டிவிடும் தீயசக்திகளை அடையாளம் கண்டு அவர்களை புறக்கணிக்க வேண்டும். சமாதான குழுக்களை ஏற்படுத்தி பேச்சுவார்த்தையின் மூலம் இந்த மோதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணைந்து நியாயமான அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு போராட முன்வர வேண்டும். இது ஒன்றுதான் இதிலிருந்து வெளியே வருவதற்கான ஒரே வழியாகும் ■




**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும், பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும், இச் சகாப்தத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளருமான தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சியையொட்டி மேற்கொள்ளப்பட்ட சுவரெழுத்துப் பிரச்சாரம்**

## மதவாதப் பிரச்சினை . . .

# மேடைப் பேச்சுக்கள் மூலம் வகுப்புவாத வன்முறைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

*1ம் பக்கத் தொடர்ச்சி*

*பின்பற்றினால் நிச்சயமாக இதைத் தவிர வேறு விளைவுகளை எதிர்பார்க்க முடியாது.*

*...ஏறக்குறைய அனைத்து மதங்களின் போதகர்களும் மதசகிப்புத் தன்மையைப் பின்பற்றும்படி போதிக்கவில்லையா? ஆயினும்கூட நமது சமூக அரசியல் வாழ்விலிருந்து வகுப்புவாதத்தை துடைத் தெறிவதில் இவர்களின் போதனைகள் இன்று கிஞ்சித்தும் உதவவில்லை. இத்தோல்விக்குக் காரணம் அவர்கள் நேர்மையாகச் செயல்படவில்லை என்று பொருளாகாது. மாறாக, இப் பிரச்சினையின்பால் அவர்கள் கொண்டிருந்த அறிவியலுக்குப் புறம்பான அணுகுமுறையும் வகுப்புவாத நச்சுக் கிருமிகளை ஒழித்துக்கட்ட முன்வைத்த வழிமுறையும்தான் காரணமாகும். இறுதியாக விஷயங்களைத் தீர்மானிப்பது செயல்முறையே (process) என்பது உணரப்படவேண்டும்.*

### மதசகிப்புத் தன்மைக்காக வேண்டுகோள் விடுப்பது பிரச்சினையைத் தீர்க்காது, மாறாக ஒரு சரியான செயல்முறையே வெகுஜனங்களிடம் மதசகிப்புத் தன்மையைக் கொண்டுவரும்

*பிரதான பிரச்சினையைப் பற்றிய விவாதத்தை தொடங்குவதற்குமுன், வரலாற்றின் பெயரால், பொய் வரலாறு கூறித்திரியும் இந்து மற்றும் முஸ்லீம் சமுதாயங்களின் ஒரு பகுதியினர், இந்து முஸ்லீம் வகுப்பினரிடையே ஒற்றுமை ஏற்படவே முடியாது என்றும் அந்நிலையில், இவ்விரு சமூகத்தினரிடையே தேசிய ஒருமைப்பாட்டை கொண்டுவருவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் உறுதியிட்டு நிலைநிறுத்துவதை என் முழு சக்திகொண்டு கண்டனம் செய்வதை எனது கடமையாகக் கருதுகிறேன். எப்படி உரத்து அடித்துக் கூறினாலும் இவ்வாதம் தர்க்கயியலுக்கு உட்பட்டதுமல்ல, அல்லது உண்மைகளால் ஸ்தாபிக்கப்பட்டதுமல்ல.*

*பர்மா மக்களில் கணிசமான பகுதியினர் முஸ்லீம்களாக இருந்தாலும்கூட, பர்மிய மக்கள் ஒரு தேசமாக உருவெடுத்ததை நாம் எவ்வாறு மறந்துவிட முடியும்? ஏராளமாக முஸ்லீம்கள் இருந்தாலும்கூட இந்தோனேசிய மக்களும் ஒரு தேசமாக உருவெடுத்துள்ளனர். சீனாவிலும் சோவியத் யூனியனிலும் முஸ்லீம்களின் ஜனத்தொகை ஒன்றும் மிகக் குறைவானதல்ல, ஆயினும்கூட சீன மற்றும் சோவியத் மக்கள் ஒருமித்த தேசங்களாக உருவாகியுள்ளனர். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் முஸ்லீம் மற்றும் முஸ்லீம் அல்லாத மக்களுக்கிடையில் அவ்வப்போது வெடித்தெழும் வகுப்புக் கலவரங்கள் இந்நாடுகள் எவற்றிலும் ஏற்படுவதில்லை.*

*பிரிவினைக்கு முந்தைய இந்தியாவில் முஸ்லீம் மக்கள் தங்களுக்கென்று தனிநாடு கோரியது போன்று மேற்கூறிய எந்த நாட்டிலும் கோரியதும் இல்லை, தற்போதும் கோரவில்லை. நமக்கு ஏற்பட்டதைப்போன்று முஸ்லீம் மற்றும் முஸ்லீம் அல்லாத மக்கள் என்ற அடிப்டையில் துண்டாடப்படும் துரதிருஷ்டம் இந்நாடுகளில் ஏற்படவில்லை.*

*பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய பொருளாதார நலன்களையும் காலனி ஆதிக்கத்தையும் தொடர்ந்து நீடித்துக் கொள்ளும்பொருட்டு நம் நாட்டில் பிரித்தாளும் கொள்கையைக் கடைபிடித்து, வேண்டுமென்றே முஸ்லீம் மக்களை தேசிய இயக்கத்திற்கு எதிராக நிறுத்தினர் என்ற வாதம் முன்வைக்கப்படும் என்பதை நானறிவேன். சந்தேகத்திற்கிடமின்றி இது உண்மையே.*

*ஆனால் பர்மாவிலும்கூட, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இதே பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லையா? டச்சு ஏகாதிபத்தியவாதிகளும்கூட இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குச் சற்றும்*



**சிப்தாஸ் கோஷ்**

*சளைக்காமல் தேசிய விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருந்த இந்தோனேஷிய மக்களின் ஒற்றுமையைக் குலைக்க முயற்சிக்கவில்லையா? இவ்வாறிருக்க இவ்வெல்லா நாடுகளிலும் இல்லாத வகுப்புக் கலவரங்களை அவ்வப்போது ஏற்படுத்தி, முஸ்லீம் மக்கள் தனிநாடு கோரி, இறுதியில் மத அடிப்படையில் நாட்டை பிரிவினைக்கு இட்டுச்சென்ற இவ்விநோதமான வகுப்புவாதப் பிரச்சினையை இந்தியா மட்டும் எதிர்கொள்வதின் காரணமென்ன? இந்தியாவில் இவ்விநோத சூழ்நிலைக்கு ஒரே காரணம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பிரித்தாளும் கொள்கை மட்டுமே என மேம்போக்காக விளக்க முற்படுவது உண்மையில் நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு, நமது தேசிய விடுதலைப் போராட்டம் முழுவதிலும் நிலவிவந்த சில அடிப்படைப் பலவீனங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதாகும். நமது நாட்டின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலை இயக்கத்தை பலவீனப்படுத்தும் வகையில், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளிடையே ஒற்றுமையை உருக்குலைப்பதற்காக, பல்வேறு வகுப்பினரிடையே குறிப்பாக இந்து, முஸ்லீம்களிடையே தொடர்ந்து விரோதத் தன்மையை நிலைநிறுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்தி, அதன்மூலம் இந்தியா ஒரு தேசமாக உருவாகும் போக்கினை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தடுத்தது அவர்களைப் பொறுத்தமட்டிலும் இயற்கையானதே. நமது நாட்டின் அன்றைய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடமிருந்து இதைத்தவிர நல்ல செயல்களை ஒரு வெகுளியைத் தவிர வேறு யாரும் எதிர்பார்க்க முடியாது.*

*இது தவிர, எப்போதுமே எந்தவொரு காலனி நாட்டிலும் சில தேசவிரோத சக்திகளும், ஒரு பகுதியினரும் ஏகாதிபத்தியவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு தேசிய விடுதலை இயக்கத்தை எதிர்ப்போராக இருப்பார்கள். இந்த ஏகாதிபத்திய ஆதரவு தேசவிரோத சக்திகளான மன்னர்கள், நவாப்புகள், ஜமீன்தார்கள், தரகு முதலாளிகள், உயரதிகாரிகள் மற்றும் ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டுகள் அனைவரும் தங்களது சொந்த நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கு இந்தியாவில் ஏகாதிபத்திய ஆட்சியை அப்படியே வைத்திருப்பது அவசியம் என்பதை நன்கறிவர். ஆக, இப்படிப்பட்ட சக்திகளின், பகுதியினரின் தேசவிரோதப் பாத்திரமானது ஒன்றும் எதிர்பார்க்கப்படாத ஒன்றல்ல. ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் அவர்களின் கைக்கூலிகளும் முஸ்லீம் மக்களை பிரதான தேசிய இயக்க நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்தி அவர்களை தேசிய சக்திகளுக்கெதிராக பயன்படுத்தியதைத் தடுக்க, நமது தேசிய இயக்கத் தலைமை தவறிவிட்டதை பின் எவ்வாறு நாம் விளக்கமுடியும்? நம் நாட்டின் தேசிய விடுதலை இயக்கத் தலைமையின் தன்மையில்தான் இத்தோல்விக்கான காரணம் பொதிந்துள்ளது.*

*...இந்தியாவில் மத்தியப்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் நிர்வாகத்தின் போது ஒரு தேசிய சந்தை உருவானதும், அகில இந்திய அளவில் மக்களிடையே பரஸ்பர வணிக வியாபாரப் பரிவர்த்தனைகளும் உறவுகளும் உருவாகிவந்தன. இத்தகைய பின்னணியில், ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்த இந்திய மக்களின் சுதந்திர போராட்டத்தின் போக்கில் பல்வேறு மொழிகளைப் பேசக்கூடிய தேசிய இனங்களும் வெவ்வேறு மதங்களைக் கடைபிடிக்கக்கூடிய பல்வேறு வகுப்பினரும் ஒன்றிணைந்து ஒரு தேசமாக உருவாக்கம்பெறும் போக்கில் இருந்தனர். இத்தேசிய இயக்கத்தின் தலைமை பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருந்திருக்குமேயானால் நம் நாட்டில் ஏகாதி பத்தியத்தை முற்றிலும் ஒழிப்பதற்கான வாய்ப்பு மட்டுமின்றி, நாட்டை முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையில் நடத்திச்சென்று, சோவியத் யூனியன், சீனாவைப் போன்று இங்கும் தேசிய–இன, வகுப்புவாத, இனவாதப் பிரச்சினைகள் அனைத்தும் ஒரேயடியாக தீர்க்கப்பட்டிருக்க முடியும். ஆனால் நமது இந்திய மக்களின் துரதிருஷ்டம் என்னவென்றால், தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமை, நம் நாட்டு தேசிய முதலாளிகளின் கையில் இருந்ததாகும். இதுவே இந்தியாவின் விநோத சூழ்நிலைக்குக் காரணமாகும். .*

*முதலாவதாக, முதலாளித்துவம் ஒரு உலக சமூக சக்தி என்ற முறையில் தனது முந்தைய புரட்சிகர குணாம்சத்தை இழந்துவிட்டதோடன்றி, திட்டவட்டமாக எதிர்ப்புரட்சி சக்தியாக மாறிவிட்டபின், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் இந்தியா ஒரு தேசமாக உருவாகும் போக்கு துவங்கியது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். இந்தப் பொதுவான குணாம்சம் தவிர, இந்திய முதலாளித்துவம் தனக்கென்று பிரத்தியேகமான குணாம்சத்தையும் கொண்டிருந்தது. மேற்கத்திய முதலாளித்துவம் சுயேட்சையாக வளர்ந்தது போன்று அல்லாமல், இந்திய முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவ உறவுகள் சூழ்ந்திருக்க அந்நிய நிதி மூலதன ஆதிக்கத்தின் கீழ் வளர்ந்து உருவானதாகும். இதன் விளைவாக அது குன்றிய வளர்ச்சியையே கொண்டிருந்தது. இந்திய முதலாளிகளின் தேசியவாதப் பிரிவு, இயற்கையாகவே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இயக்கத்தில் குதிக்க நேர்ந்தது. ஏனெனில் அது தன் வர்க்க ஆட்சியை ஏற்படுத்துவதற்கும், இந்திய மக்களை சுதந்திரமாக சுரண்டுவதற்கும் நம் நாட்டின் ஏகாதிபத்திய ஆட்சி தாண்ட முடியாத பெரும் தடையாக இருந்தது. ஆனால், “ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சி” என்ற இச்சகாப்தத்தில் பிற காலனி ஆதிக்கத்தின்கீழ் இருந்த முதலாளித்துவ வாதிகளைப்போன்றே, இங்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டங்களைக் கண்டு மரணபயம் கொண்டிருந்தனர். ஏனெனில் இந்திய மக்களின் தேசிய விடுதலைக்கான புரட்சிகரப் போராட்டம் வெற்றிபெறுமானால் ஏகாதிபத்திய ஆட்சி முடிவுக்கு வருவதோடு மட்டுமல்லாமல் இப்போராட்டத்தில் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமை நீக்கப்பட்டு முதலாளித்துவமற்ற ஒரு வளர்ச்சிப் பாதைக்கு வழிதிறந்து, இந்தியாவில் முதலாளித்துவ ஆட்சியதிகாரத்தை நிலைநிறுத்தும் அனைத்து வாய்ப்புக்களையும் முற்றிலும் தகர்த்துவிடும் என்று அவர்கள் அஞ்சினர்.*

*ஒருபுறம் ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடு, மறுபுறம் இந்திய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகரப் போராட்டங்களைக் கண்டு மரணபயம், இதனால்தான் இந்திய முதலாளிகளின் தேசியவாத பிரிவு ஏகாதிபத்தியத்திற்கெதிராக தங்களை ஒரு சீர்திருத்தவாத எதிர்ப்பு அணியாக தகவமைத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டது. நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான அதன் பாத்திரமும் இதைப்போன்றே சமமான சமரசத்தன்மை கொண்டதாக இருந்தது.*

*தொடர்ச்சி **6**ம் பக்கம்*

## மதவாதப் பிரச்சினை . . .

# மக்களைப் பிரித்தாளும் ஆட்சியாளர்களின் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும்

5ம் பக்கத் தொடர்ச்சி

### இந்திய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவத்துடனும் சமரசம் செய்துகொண்டு வளர முயற்சித்தது

இது மட்டுமல்ல, இந்திய மக்களை மதக்கட்டுத் தளையிலிருந்து விடுவிக்கவோ, சமூக மற்றும் கலாச்சாரப் புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றுவதன்மூலம் சமூகத்தை ஜனநாயகப்படுத்தவோ, இந்திய தேசியவாதத் தலைமை முயற்சிக்காதது மட்டுமின்றி, அதற்கு மாறாக தேசியவாதக் கருத்துக்களை பரப்புவதற்கு மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டது. ஆக இந்திய தேசியவாதம் அடிப்படையில் மதச் சார்புள்ளதாக இருந்தது. இந்த, மதம் சார்ந்த தேசியவாதம் தன்னை இந்துமதப் புத்துயிர்ப்பு என்ற வடிவத்தில் வெளிப்படுத்திக் கொண்டது. இந்துமதப் புத்துயிர்ப்பு சார்ந்த இந்திய தேசியவாதமானது இந்துக்கள் அல்லாத மக்களிடையே குறிப்பாக முஸ்லீம் மக்களிடம் உளவியல் ரீதியில் உருவாக்கிய எதிர்வினையே நம் நாட்டின் தேசிய விடுதலை இயக்கத்திலிருந்து அவர்களை புறந்தள்ளி வைத்ததற்குப் பெரும்பாலும் காரணமாயிற்று.

முஸ்லீம்கள் குறித்து மட்டும் ஏன் பேசவேண்டும்? தாழ்ந்த சாதி இந்துக்கள் என்று அழைக்கப்படுவோரின் நிலை என்ன? சமூக, கலாச்சாரப் புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றாததன் விளைவாக இந்து சமுதாயத்தில் சமூக ரீதியில் பின்தங்கிய மக்கள், மதக் கட்டுத் தளையில் மட்டுமின்றி, உயர்சாதி இந்துக்கள் என்று அழைக்கப்படுவோரின் சமூகக் கலாச்சார அடக்குமுறையின் கீழ் இன்னும் இருந்து வருகின்றனர். இந்த அம்சத்தைப் பொறுத்த மட்டிலும் இந்திய தேசியவாதம் தன்னை ஒரு பரந்துபட்ட இந்துமத புத்துயிர்ப்பு வாதமாகக்கூட காட்டிக்கொள்ள முடியவில்லை. காந்திஜி மற்றும் வேறுசில தலைவர்கள் முயற்சித்தபோதும்கூட அதற்கு மாறாக, வங்கத்தில் பிராமணர், சத்திரியர், காயஸ்தர், வைசியர்கள் மற்றும் பிற உயர்ஜாதி இந்துக்கள் என்று அழைக்கப் படுவோரின் ஆதிக்கத்தின் கீழுள்ள பிராமணிய வழிபாட்டுப் புத்துயிர்ப்புடன் அது தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டது.

மதம், மொழி, சாதி, இனம் போன்றவற்றில் வேறுபடும் மக்களை ஒருமித்த தன்மைகொண்ட ஒரு தேசமாக உண்மையிலேயே ஒருங்கிணைக்க அவ்வொருங்கிணைப்பின் செயல்போக்கிற்கு தடைச் சக்தியாக இருக்கும் மதப் பழக்க வழக்கங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது. சமூக, கலாச்சாரப் புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றும் போக்கில் சமுதாயத்தை ஜனநாயகமயப் படுத்துவதன்மூலம் தனிநபர்களின் சமூக நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் மதம் முற்றிலும் சக்தியற்ற ஒன்றாக மாற்றப்படும் போது மட்டுமே வெவ்வேறு சமூக மக்களை உண்மையாகவே ஒன்றிணைத்து ஒரு தேசமாக உருவாக்கமுடியும்.

தேசியவாத முதலாளித்துவத் தலைமையோ அல்லது அதற்கு ஒரு மாற்றுத் தலைமையோ அல்லது அதற்கு ஒரு மாற்றுத் தலைமையை நிறுவிடும் அவசியத்தைப் பற்றிப்பேசிய பிற சக்திகளோ இந்திய தேசத்தை உருவாக்குவதற்கான இவ்வத்தியாவசியமான கடமைகளை நிறை வேற்றவில்லை. ஆக, அனைத்துச் சமூக மக்களையும் ஒரு தேசமாக ஒன்றிணைப்பதில் நேர்மை இருப்பினும்கூட தவறான வழிமுறையைக் கடைப்பிடித்ததால் பல சமூக மக்களையும் குறிப்பாக முஸ்லீம் மக்களை ஒரு தேசமாக ஒருங்கிணைப்பதில் தோல்வியடைந்தனர்.

கடந்தகால சரித்திரத்தை வெறும் புத்தக ஆராய்ச்சிக்காக அல்ல, மாறாக சரித்திரத்தின் போதனையை அறிந்து கொள்வதற்காகவே குறிப்பிடுகிறேன். ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத் துவத்திற்கு எதிரான வெறுமனே சீர்திருத்தவாத எதிரணி பாத்திரத்தை வகித்ததன் காரணமாக மத மனோபாவத்திலிருந்து விடுபட்ட சமூக, கலாச்சாரப் புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்ற தேசியவாத தலைமையால் இயலவில்லை. அகத்தே இப்படிப்பட்ட பலவீனத்தையும் அதே சமயத்தில் புறத்தே இந்திய மக்களை ஒரு தேசமாக வளர்த்தெடுக்கும் அவசியத்தையும் எதிர்க் கொண்டதால் அது பின்னோக்கி இந்து மதத்தின் பரந்த மனப்பான்மை, சகிப்புத்தன்மையின் அடிப்படையில் வெவ்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்ட பல சமூக மக்களை ஒரு தேசமாக ஒருங்கிணைக்க முயற்சித்தது.

இந்த அம்சத்தில் தேசியத்தலைமை கடைபிடித்த தவறான அணுகுமுறையை அதிகாரத்திற்கு வந்தபின்பும்கூட திருத்திக் கொள்ளவில்லை. நம் நாட்டின் இன்றைய ஆட்சியாளர்கள், சமூக கலாச்சாரப் புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மாறாக மதச்சார்பின்மை என்றபெயரில் மதச்சார்பின்மைக்கு எதிரான சக்திகளுக்கும் போக்குகளுக்கும் அனைத்துவித மதப் பழக்க வழக்கங்களுக்கும், பண்டையப் பழக்கத்திற்கும், முன் அபிப்பிராயங்களுக்கும் அதீத ஆர்வத்துடன் ஊக்கம் அளித்துவருகின்றனர். இவை யனைத்தும் சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் இருந்ததைவிடப் பல மடங்கு அதிகரித்துவிட்டன. இச்சூழ்நிலையில் இந்துமதப் புத்துயிர்ப்பு என்ற கோஷம் பலமாக காலூன்றி வருவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

உண்மையான மதச்சார்பின்மை என்பதற்கு தனிநபர் தன் மதநம்பிக்கையை நம்பவும் கடைபிடிக்கவும் பரப்பவும் ஊக்கமளிப்பது என அர்த்தம் அல்ல என்பது உணரப்பட வேண்டும். அல்லது வெகுஜனங்களிடையே மதச் செல்வாக்கினை பரப்பிடும்வகையில் ஒவ்வொரு மத நம்பிக்கைக்கும் அரசு ஆதரவு அளிப்பது என்றும் அர்த்தமாகாது. அல்லது குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றும் ஒரு சமூகத்தினரின் மதத்தைமட்டும் கருத்தில் கொண்டு விசேஷ சலுகைகளை வழங்குவதும் அதன் நோக்கமாக இருக்கமுடியாது.

ஒரு உண்மையான மதச்சார்பற்ற அரசு மதத்தை தன் குடிமக்களின் தனிப்பட்ட விஷயமாகக் கருதுகிறது. எனவே தனிநபர் மதத்தைக் கடைபிடிப்பதை, பின்பற்றுவதை, பரப்புவதை அரசு ஆதரிப்பதும் இல்லை; எதிர்ப்பதும் இல்லை; தலையிடுவதும் இல்லை. இதற்கு மாறாக அது மத நம்பிக்கை உள்ளவர்களுக்கும் மத நம்பிக்கையற்ற வர்களுக்கும் தங்கள் நம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கு முழு சுதந்திரத்தை உத்திரவாதப்படுத்துகிறது. சமூக, கலாச்சாரப் புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றுவதன்மூலம் அத்தகைய அரசு சமூகத்தை ஜனநாயகப்படுத்தி, மதத்தின் செல்வாக்கை தனிநபர் மற்றும் அரசின் சமூக நடவடிக்கைகளிலிருந்து விலக்கி அதனைச் சக்தியற்றதாக்கிவிடுகிறது.

நம் நாட்டின் இன்றைய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் அதீத இந்துமதப் புத்துயிர்ப்பு போக்கின் விளைவாக இந்திய மக்கள் இன்றளவும் மொழி, மதம், சாதி, இனத்தால் பிளவுபட்ட பல்வேறு சமூகங்களாக ஒருவித சமூக, கலாச்சாரக் கலவையாகவே இருந்து வருகின்றனர். நிலப்பிரபுத்துவம், நிலப்பிரபுத்துவ பிரிவினைகள், வகுப்புவாதப் பிரச்சினை குறித்து சிப்தாஸ் கோஷ் கிறிஸ்துவ தேவாலயங்கள் அவைகளின் மீதான அரசின் செல்வாக்கு ஆகியவற்றை எதிர்த்து வெற்றிகரமாக சமூக கலாச்சாரப் புரட்சிகளை நிறைவேற்றி, சமூகம் ஜனநாயகமயமாக்கப்பட்டு உருவான மேற்கத்திய நவீன தேசங்களும்கூட இன்னும் முழுமையாக மதவெறிவாதம், இனவெறிவாதம் மற்றும் இனக்கலவரங்கள் (உதாரணமாக அமெரிக்காவில் கருப்பர்கள்மீதான ஒடுக்குமுறை, இங்கிலாந்தில் இனக்கலவரங்கள் போன்றவை) ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாக விடுபட முடியவில்லை. இவ்வாறாக இருக்கும்போது இந்திய தேசம் சமூக கலாச்சார ரீதியில் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், உயர்சாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள், ஜைனர்கள், கிறிஸ்துவர்கள், அஸ்ஸாமியர்கள், வங்காளிகள், ஒரியர்கள், தமிழர்கள் என்று இன்னும் பலவாகப் பிரிவினைப்பட்டு இருப்பதால் மொழி வெறிவாதம், சாதியவாதம், வகுப்புவாதம் போன்றவையெல்லாம் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பதை மிக எளிதில் புரிந்து கொள்ளமுடியும்.

### நமது நாட்டின் வகுப்புவாதப் பிரச்சினைக்கு தீர்வென்பது சமூக, கலாச்சாரப் புரட்சிகளை நிறைவேற்றுவதன் மூலம் சமுதாயத்தை ஜனநாயகப்படுத்தும் சரியான வழிமுறையில் தான் பொதிந்திருக்கிறது

ஏறுமுகத்திலிருந்த முதலாளித்துவத்தால் நடத்தப்பட்ட நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சிகரப் போராட்டங்களின்மூலம் சமூகம் ஜனநாயகமயப்படுத்தப்பட்டு தேசங்கள் உருவாக்கபட்ட, மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் இன்றும் ஏன் இனக் கலவரங்கள் வெடித்தெழுகின்றன என்ற கேள்வியை நீங்கள் என்னிடம் எழுப்பக்கூடும் என்பதை நானறிவேன். இதன் காரணத்தை அறிவது ஒன்றும் கடினமல்ல.

மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் நிலப்பிரபுத்துவ பிரிவினைகள் அம்சங்களைப் பொறுத்தமட்டில் தேசத்தை உருவாக்கும் செயல்முறை பிரதானமாக முற்றுப் பெற்றுவிட்டது என்பது உண்மையே. எனவே அங்கு வகுப்புவாத, மதவாத வேறுபாடுகள் தேசிய வாழ்க்கையில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் தானே துவக்கிய ஜனநாயகமயமாக்கும் செயல்முறையை முழுமையாக நிறைவேற்றும் திறன் எந்த பூர்ஷ்வாவர்க்கத்திற்கும் கிடையாது.

### முதலாளித்துவ ஆட்சியில் ஜனநாயக புரட்சியின் சில கடமைகள் நிறைவேற்றப்படாமலே இன்னும் தொடர்கின்றன

தேசிய இனப் பிரச்சினையும் அப்படிப்பட்ட நிறைவேற்றப்படாத கடமைகளில் ஒன்றாகும். அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் எங்கெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் இருக்கின்றனவோ அங்கே மேலாதிக்கங்கொண்ட தேசிய இனம் பிற தேசிய இனத்தை அல்லது இனங்களை அடக்குகிறது. எனவே முதலாளித்துவத்தின்கீழ் மக்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கு மட்டுமின்றி, தேசிய இன அடக்குமுறைக்கும் ஆளாக்கப் படுகின்றனர்.

மேற்கத்திய நாடுகளில் தோன்றும் இனக்கலவரங்கள் இப்படிப்பட்ட மேலாதிக்க தேசிய இனம் சிறுபான்மை தேசிய இனத்தை ஒடுக்குவதின் பிரதிபலிப்பேயாகும்.

முதலாளித்துவம் முன்பு தனது வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தேசிய ஒருங்கிணைப்பிற்காகவும் ஒரு தேசத்தை உருவாக்குவதற்காகவும் குறிப்பிட்ட பிராந்தியத்தில் வாழும் பல இன மக்களை ஒருங்கிணைக்க முயற்சித்தது. ஆனால் அதுவே தனது வளர்ச்சியின் இன்னொரு கட்டமான, அதாவது ஏகாதிபத்திய கட்டத்தில் மக்களின் எழுச்சிக்கு எதிராக தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கவும் முயற்சிக்கிறது.

அதன் நெருக்கடி மேலும் தீவிரமடையும்போது முதலாளித்துவத்திற்கு எதிரான உழைக்கும் மக்களின் போராட்டங்கள் மேன்மேலும் உத்வேகம் அடைவதால், முதலாளித்துவம்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# மத்திய அரசாங்கத்தின் புதிய மின் கட்டண நடைமுறை சாமானிய மக்களை மேலும் சுரண்டும் தந்திரம்

திமுக அரசாங்கம் சென்ற வருடம் மின் கட்டணத்தை உயர்த்தியதை அனைத்துப் பகுதி மக்களும் கடுமையாக எதிர்த்தனர். மேலும் மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க இனி நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் ஆண்டுதோறும் ஜூலை 1ம் தேதியில் கட்டண உயர்வு அமல்படுத்தும் என்றும் திமுக அரசாங்கம் அறிவித்தது. அதன்படி வருகிற ஜூலை 1ம் தேதியிலிருந்து மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நம் பொருளாதாரத்தில் நிலவிவரும் பண வீக்கம், விலைவாசி உயர்வு, மக்கள் வாழ்க்கை நிலை தொடர்ந்து கீழ்நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் நிலையில், வருடா வருடம் கட்டண உயர்வு மேலும் மேலும் மக்களை தாங்கவொண்ணாத நெருக்கடிக்கு இட்டுச் செல்லும் என்பது உறுதி.

இக் கட்டண உயர்வுக்கு மக்களிடமிருந்து வந்த எதிர்ப்பு காரணமாக வீட்டு உபயோகத்திற்கான கட்டண உயர்வை இந்த ஆண்டு தமிழ்நாடு அரசாங்கமே ஏற்றுக்கொண்டு விலக்களிப்பதாக கூறியுள்ளது. ஆக அடுத்த ஆண்டு முதல் வீடுகளுக்கான மின் கட்டணம் ஆண்டுதோறும் ஜூலை 1 முதல் உயரும் என்பது திண்ணம்.

எம் எஸ் எம் இ என்று சொல்லப்படும் சிறு குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் யூனிட் ஒன்றுக்கு 21 பைசா உயர்வை அறிவித்து உள்ளது. ஏற்கெனவே நிலவிவரும் சந்தை நெருக்கடிகள், கொரோனா பாதிப்பால் ஏற்பட்ட இழப்புகளைச் சரி செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் நிலையில் சிறுதொழில்களை தூக்கிவிடுவதற்கான ஏதாவது திட்டங்களை அறிவிக்கவேண்டிய நிலையில் அந்நிறுவனங்களை மேலும் அழிவிற்குள்ளாக்கும் வகையில் இம் மின்கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளதை கண்டிக்க வார்த்தைகளே இல்லை.

இக்கட்டண உயர்வினால் பல நிறுவனங்கள் தங்கள் தொழிலை இழுத்துமூடும் நிலை ஏற்படும். பாதிக்கப்படுவதிலிருந்து தப்பிக்கும் சக்தியுள்ள சில நிறுவனங்கள் இக்கட்டண உயர்வால் ஏற்படும் சுமையை தம் நுகர்வோர்மீது ஏற்றிவிடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இதன் காரணமாக விலைவாசி கடுமையாக உயர்ந்து இறுதியில் சாதாரண ஏழை–நடுத்தர மக்களே கடும் துன்பத்திற்கு உள்ளாவர்.

எனவே தமிழ்நாடு அரசாங்கம் ஆண்டுதோறும் மின் கட்டண உயர்வு எனும் படுபாதக முடிவைத் திரும்பப் பெறவேண்டும். அதுமட்டுமின்றி முன்பு அறிவித்துள்ள மின்கட்டண உயர்வையும் முழுமையாக வாபஸ் பெறவேண்டும்.

இது மட்டுமல்லாமல் தமிழ்நாடு அரசாங்கம் ஸ்மார்ட் மீட்டர் என்று சொல்லப்படும் 'திறன்மிகு அளவி' திட்டத்தை அமுல்படுத்தும் வேலைகளைத் துரிதப்படுத்தி உள்ளது. மத்திய பாஜக அரசாங்கம் மின்சார சட்டம் 2003 அடிப்படையில் கொண்டுவரப்பட்ட ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் எமது அகில இந்திய மின்நுகர்வோர் சங்கம் போராட்டங்களை நடத்தி வருகிறது.

இத்திட்டமானது, மின் நுகர்வை தனியாரிடம் தாரை வார்ப்பதற்கான முன்நடவடிக்கை மற்றும் முன்பணம் செலுத்தி மின்சாரம் பெறும் ப்ரீபெய்டு திட்ட அமலாக்கல், வரம்பு மீறிய மின் துண்டிப்பு உள்ளிட்ட பல்வேறு நுகர்வோர் விரோத அம்சங்களை அமல்படுத்தும் உள்கட்டமைப்பை உருவாக்கும் திட்டமாகும் என மின்சாரத்துறை சம்பந்தப்பட்ட சமூக ஆர்வலர்களால் எச்சரிக்கை எழுப்பப்பட்ட அபாயகரத் திட்டமாகும்.

அதுமட்டுமல்லாமல் இத்திட்டம் பல லட்சக்கணக்கானோரின் வேலை வாய்ப்பைப் பறிப்பது மட்டுமல்லாமல் அந்த வேலைகளை நேரடியாக ஸ்மார்ட் மீட்டர் நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கும் படுபாதகச் செயலாகும். தனியார் நிறுவனங்களிடம் மின் கட்டணம் வசூலிப்பு சம்பந்தமான வேலைகளை ஒப்படைத்து நுகர்வோர் பிரச்சினைகள் என்று வரும்போது தனியார் நிறுவனங்களுடன் மோதிக் கொண்டு நிற்கும் அவல நிலைக்குக் கொண்டு செல்லும்.

பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து மக்கள் வரிப்பணத்தில் உருவாக்கப்படும் இக்கட்டமைப்பு, மின்சார சட்டம் 2003 மற்றும் அதன் சமீபத்திய திருத்தங்களின் அடிப்படையில் நடைபெறும் செயல்பாடுகள் என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். ஒருபுறம் பாஜகவின் கொள்கைகளை எதிர்ப்போம் என்று கூறிக்கொண்டு மக்களுக்கு விரோதமான அக் கொள்கைகளை முழு வீச்சில் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசாங்கத்தின் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கு எதிராகவும் மின் துறையை தனியார்மயமாக்குவதற்கு எதிராகவும் தமிழகத்தின் பொது மக்களும் விவசாயிகளும் தொழிலாளர்களும் சிறு தொழில்–சிறு வணிகம் செய்வோரும் ஒன்றுபட்ட போராட்ட இயக்கங்களை நடத்த வேண்டும் ■

# மதவாதப் பிரச்சினை . . .

6ம் பக்கத் தொடர்ச்சி

மேன்மேலும் பாசிச குணாம்சங்களைப்பெற்று மக்களின் இன, மத உணர்வுகளை வெறியாகத் தூண்டி முதலாளித்துவத்திற்கு எதிரான அவர்களது போராட்டத்தை திசைதிருப்ப முயற்சிக்கிறது. இதன் காரணமாகத்தான் மேற்கத்திய பூர்ஷ்வா ஜனநாயக நாடுகளிலும்கூட மதவெறிவாத, இனவாத அறிகுறிகளையும் இனக்கலவரங்களையும் மேன்மேலும் நாம் காண்கிறோம்.

இவ்வாறாக முதலாளித்துவம் இருக்கும்வரை மக்கள் விரோதக் கருத்துக்களான வகுப்புவாதம், சாதியவாதம், இனவாதம் போன்றவற்றிற்கான அடிப்படைக் காரணிகளும் இருந்தே தீரும். இதன் விளைவாக வகுப்புக் கலவரங்களுக்கான அடித்தளமும் இருக்கவே செய்யும். பாட்டாளிவர்க்கத்தால் வழிநடத்தப்பட்டு உழைக்கும் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளித்துவத்தின் மிச்ச சொச்சங்களையும் துடைத்தெறிந்து ஜனநாயகப் புரட்சியின் அனைத்துக் கடமைகளையும் முற்றிலும் நிறைவேற்றுவதன்மூலம் வெற்றிகரமாக சோசலிசம் கட்டியமைக்கப்படும்போது மட்டுமே தேசியவாத, வகுப்புவாத மற்றும் இனவாதப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும். எனவே, நம் நாட்டில் வகுப்புவாதத்தையும் வகுப்புக் கலவரங்களையும் நிரந்தரமாக ஒழித்துக்கட்ட உண்மையிலேயே விரும்புவோர் சரித்திரம் கற்றுக்கொடுக்கும் இப்போதனையை நினைவிற்கொண்டு, முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து சோசலிசத்தை நிலை நிறுத்துவதற்காக பணியாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

அதுவரை, இடைக்கால நடவடிக்கையாக கீழ்க்கண்ட திட்டத்தை நான் முன் மொழிகிறேன்:

1) கல்விச்சாலைகள் அனைத்து விதமான மதச் செல்வாக்கிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும்.

2) நேரடியாக அரசின் அல்லது அரசு ஆதரவோடு நடைபெறும் எந்த நிகழ்ச்சியிலும் மதச் சடங்குகள் பின்பற்றபடக்கூடாது.

3) சாதி, மத கலப்புத் திருமணங்கள் நடப்பில் ஆதரிக்கப்படவேண்டும்.

4) சமூக, மத விழாக்களில் பல்வேறு சமூகத்தினர் பொதுவாக கலந்து உறவாடுதலை ஊக்கத்துடன் ஆதரிக்க வேண்டும்.

5) வகுப்புவாதப் பிரச்சினைகள் குறித்தும், அதைத் தீர்ப்பதற்கான வழி வகைகளை காண்பதற்கும் வெவ்வேறு சமூகத்தினரைக் கொண்ட குழுக் கூட்டங்களும் பொதுக் கூட்டங்களும் பெரும் எண்ணிக்கையில் ஏற்பாடு செய்து விவாதிக்கப்பட வேண்டும்.

6) பல்வேறு மொழிகளில் பத்திரிகைகள் வெளியிடப்பட்டு, அதில் வகுப்புவாதத்தை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ ஆதரிப்பதைத் தவிர்த்த வகுப்புவாதப் பிரச்சினைகள் குறித்த எழுத்துக்கள் இடம்பெறவேண்டும்.

7) வகுப்புவாத எதிர்ப்பு இயக்கங்களை நடத்திடப் பல்வேறு சமூகப் பிரதிநிதிகளைக் கொண்ட மக்கள் கமிட்டிகள் அனைத்து மட்டங்களிலும் அமைக்கப்பட்டு இவ்வியக்கத்தில் பெரும் எண்ணிக்கையில் வெகுஜனங்கள் பங்கெடுக்கும் முகமாக கவனத்துடன் திரட்டப்படவேண்டும்.

8) வகுப்புவாதத்தைப் பிரச்சாரம் செய்பவர் அல்லது கடைபிடிப்பவர் அல்லது அதற்கு காரணமாக இருப்பவர் மீது சமூகத்தை விட்டே ஒதுக்குமளவிற்குகூட சமூகத் தடையை செயற்பூர்வமாக விதிக்கவேண்டும்.

நண்பர்களே, வேறுபல நடவடிக்கைகளும் உள்ளன. ஆனால் தற்சமயம் இவைகளைக் கொண்டு துவக்கலாம் என நான் எண்ணுகிறேன் ■

# தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்து அகில இந்திய கண்டன நாள்




**மக்கள்விரோத, தனியார்மய தேசிய கல்விக் கொள்கை 2020ஐ எதிர்த்து அகில இந்திய ஜனநாயக மாணவர் அமைப்பின் (AIDSO) சார்பில் சென்னையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# மணிப்பூர் கலவரம் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 26.06.2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

“மணிப்பூரில் மே 3, 2023 முதல் பற்றி எரிந்துவரும் மோசமான வகுப்புவாத மோதலைக் கண்டு நாங்கள் மிகுந்த கவலையடைகிறோம். இது, பாஜக ஆளும் மாநில மற்றும் மத்திய அரசாங்கங்களால் திட்டமிட்டு முழு ஆதரவுடன் நடைபெற்றுவருகிறது. இக்கலவரத்தில் நூற்றுக் கணக்கானோர்கொல்லப்பட்டும் ஆயிரக் கணக்கானோர் தங்கள் வசிப்பிடத்திலிருந்து விரட்டப்பட்டும் இருக்கின்றனர். வன்முறை மேலும் பரவலாகிக் கொண்டிருக்கிறது. மாநிலமே எரிந்துகொண்டிருக்கையில் பாஜக மத்திய அரசாங்கம் கிட்டத்தட்ட மவுனமாக வேடிக்கை பார்ப்பதை நாங்கள் மிகவும் கோபத்துடன் நோக்குகிறோம். கலவரம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் 'கவலைப்படுகிறேன்' என்று ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. தனது பிரித்தாளும் கொள்கையை நடைமுறைப் படுத்தி ஓட்டுவங்கியை வளர்த்துக் கொள்ளும் கொள்கைக்கேற்ப மத்திய அரசாங்கம் வேண்டுமென்றே வகுப்புக் கலவரத்தை தொடர அனுமதித்துக் கொண்டிருக்கிறது. சாதி, மத, இன வேறுபாடின்றி அனைத்து சாமானிய மக்கள் வாழ்க்கையுடனும் அவர்கள் விளையாடு வதைத்தான் இது சுட்டிக்காட்டுகின்றது.

மாநில மற்றும் மத்திய பாஜக அரசாங்கங்களின் கலவரத்தைத் தூண்டும் அணுகுமுறையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளையில், அமைதியையும் இயல்பு வாழ்க்கையையும் திரும்பக் கொண்டுவர அரசாங்கங்கள் விரும்பினால், வலிமையான கரம் கொண்டு வகுப்புக் கலவரத் தீயை சில மணிப்பொழுதில் அணைக்க வேண்டும் என நாங்கள் மீண்டும் கோருகிறோம்.

மணிப்பூர் மக்களை நேசிக்கும், நாட்டின் அமைதியை விரும்பும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நாங்கள் விடுக்கும் அறைகூவல் இதுதான்: மக்களிடமிருந்து பிரிவினைவாத வெறியர்களையும் வகுப்புவாத சக்திகளையும் தனிமைப்படுத்தி, மக்களின் உண்மையான பொதுவான பிரச்சினைகளை மையமாக வைத்து ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கத்தை வளர்க்க வேண்டும். இதன் மூலம் தான் மணிப்பூர் மக்களின் அனைத்துப் பிரிவினரிடையே ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் உருவாக்க முடியும்.

எனவே, மணிப்பூரை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துவரும் மத்திய, மாநில அரசாங்கங்களின் சூழ்ச்சிக்கு எதிராக, வரும் ஜூன் 30, 2023 நாளை, கண்டன நாளாக அனுசரிக்குமாறு நாட்டு மக்களை அறைகூவி அழைக்கிறோம்! ■

## மணிப்பூர் வன்முறையைக் கண்டித்து நாடு தழுவிய கண்டன இயக்கத்தின் ஒரு பகுதியாக புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் கண்டன நாள் அனுசரிப்பு



புதுச்சேரி




மதுரை




தேனி



**ஆகஸ்ட் 5, 2023**

**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும், இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான**

# சிப்தாஸ் கோஷ்

**பிறந்த நூற்றாண்டு நிறைவு**

**பிரிகேட்பரேட் மைதானம், கொல்கத்தா**

*தலைமை: தோழர்*

## ராதாகிருஷ்ணா

*பொலிட்பீரோ உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)*

*உரை: தோழர்*

## சத்யவான்

*பொலிட்பீரோ உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)*

*சிறப்புரை: தோழர்*

## பிரவாஸ் கோஷ்

*பொதுச்செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)*

***அனைவரும் வருக!***

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**